**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், அதைப் பற்றி நீங்கள் தனியாகக் கேளுங்கள், உட்காருங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 174, மாண்புமிகு உறுப்பினர் திரு. பூண்டி கே. கலைவாணன், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**174—**

## காகிதம் தயாரிக்கும் தொழிற்சாலை

***21221—திரு. பூண்டி கே. கலைவாணன்:**

*மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) திருவாரூர் தொகுதியில் வைக்கோலை மூலப்பொருளாகப் பயன்படுத்தி காகிதம் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, தொழில் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திருவாரூர் தொகுதியில் வைக்கோல்மூலம் காகிதம் தயாரிக்கும் தொழிற்சாலை துவங்க செயற்குறிப்பு ஏதும் அரசிடம் தற்போது இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பூண்டி கே. கலைவாணன் அவர்கள்.

**திரு. பூண்டி கே. கலைவாணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள், விளையாட்டு மைதானம் அமைக்க திருவாரூர் மாவட்டத்திற்கு வாய்ப்பு வழங்கியமைக்கு முதலில் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள், 10 தொகுதிக்கு என்று பொதுவாகத்தானே சொன்னார்கள்.

**திரு. பூண்டி கே. கலைவாணன்:** திருவாரூருக்குக் கேட்டிருக்கிறேன்.

*2022 ஏப்ரல் 26*]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *கேள்விக்கு வாருங்கள்.*

**திரு. பூண்டி கே. கலைவாணன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் மாவட்டமான திருவாரூர் மாவட்டத்திலுள்ள மக்களின் ஒரே வாழ்வாதாரம் விவசாயம்தான். முற்றிலும் விவசாய மாவட்டமான திருவாரூர் மாவட்டத்தில் மூன்று போகம் நெல் சாகுபடி செய்யப்படுகிறது. கணக்கிட்டுப் பார்த்தால், மூன்று போகத்திற்கும் சேர்த்து மிக அதிக அளவில் 2,02,510 ஹெக்டேர் நிலப்பரப்பில் நெல் சாகுபடி செய்யப்படுகிறது. வைக்கோல் மிக அதிக அளவில் அங்கே கிடைக்கிறது. அங்கே ஒரு வருடத்திற்கு 8,10,040 மெட்ரிக் டன் வைக்கோல் கிடைக்குமளவிற்கு உற்பத்தி இருக்கிறது. உள்ளூர் கால்நடைகளுக்குப் போக, சிறிது வைக்கோல் வெளி மாவட்டங்களுக்கு கால்நடை வளர்ப்புக்காக அனுப்பப்படுகிறது. மீதமுள்ள வைக்கோல் ஒன்றும் செய்ய முடியாத நிலையில் மழைக் காலங்களில் சேதமடைகிற ஒரு சூழல் உருவாகிறது. அந்த வைக்கோலை வயலிலிருந்து எடுக்கவில்லையென்றால், வயலுக்கும் அது இடையூறாக இருக்கும் என்பதால், அந்த வைக்கோலை வைத்து காகிதத் தொழிற்சாலை அமைக்க அரசு முன்வர வேண்டும் என்ற அன்பான வேண்டுகோளை வைக்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

*முற்பகல் 10–10*

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வைக்கோலிலிருந்து காகிதம் தயாரிப்பது என்பது ஆய்வகரீதியில் வேண்டுமானால் சரியாக இருக்கலாம்.* Laboratory process-*ல் வைக்கலாம். ஆனால், வணிகரீதியாக,* commercial production *என்று வருகிறபோது, அதில் பல்வேறு சிக்கல்கள் இருக்கின்றன. வைக்கோல் என்பது பருவமழையை நம்பியிருக்கக்கூடிய பயிர் மூலமாகக் கிடைக்கக்கூடியது. பெரிய அளவில் விளைகின்றது என்றாலும்கூட, பெரும் பகுதி இடத்தை அடைக்கின்ற காரணத்தால், அதை சேமிப்புக் கிடங்குகளில் வைப்பதும் சிரமம்.*

*மற்றொன்று, வைக்கோலில்* silica content *மிகவும் அதிகமாக இருக்கும். மண் ஒட்டிக் கொண்டு வருவதன் காரணமாக* processing *செய்கின்றபோது இயந்திரங்களிலே பழுது ஏற்படக்கூடிய நிலை. மற்ற மூலப்பொருட்களிலிருந்து கிடைக்கக்கூடிய கூழின்*

அளவைவிட, வைக்கோலிலே கிடைக்கக்கூடியது 25 சதவிகிதம் குறைவாக இருக்கும் என்று கூறுகிறார்கள். Fibre-ன் நீளம் குறைவாக இருப்பதால் தொடர்ச்சியாக நாம் அதைப் பயன்படுத்த முடியாத ஒரு நிலை. ஆக, இத்தகைய இடர்பாடுகள் நிறைந்திருக்கக்கூடிய மூலப்பொருளாக வைக்கோல் இருக்கின்றது. எல்லாவற்றிற்கும் மேலாக, காகிதத் தொழிற்சாலை Pollution Control-ல் Red Plus category-ல் வருகிறது. டெல்டா மாவட்டங்களிலே அந்தத் தொழிற்சாலையை அமைப்பதிலேயும் பல சிக்கல்கள் இருக்கின்றன. எனவே, இப்போதைக்கு அதுகுறித்த சாத்தியக்கூறுகள் அங்கே இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பூண்டி கே. கலைவாணன் அவர்கள்.

**திரு. பூண்டி கே. கலைவாணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவாரூர் மாவட்டத்தில், நிலத்தடி நீரைப் பயன்படுத்தி மிகப் பெரிய அளவில் தொடர்ந்து விவசாயம் செய்யப்படுகிறது. பருவ மழை பொய்த்தாலும், நிலத்தடி நீரின்மூலம் அங்கு விவசாயம் நடைபெறுகிறது என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களின் மேலான கவனத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், திருவாரூர் மாவட்டத்தில் விவசாயம் சார்ந்த உணவுத் தொழில் பூங்கா அமைக்க இந்த அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவாரூர் மாவட்டத்தினுடைய இயல்பைப் பொறுத்தமட்டில் இத்தகைய வேளாண் சார்ந்திருக்கக்கூடிய தொழில்கள் மற்றும் உணவுப் பொருட்கள் தொடர்பான தொழில்களை அமைப்பதற்கு அது தகுந்த இடமாக நிச்சயமாக இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் திரு. பூண்டி கலைவாணன் அவர்கள்கூட திருவாரூரிலே SIPCOT மூலமாக தொழிற்பேட்டை ஒன்றை அமைக்க வேண்டுமென்று தொடர்ந்து வலியுறுத்திக் கொண்டிருக்கிறார்கள். இடமெல்லாம்கூட இருக்கிறது

*2022 ஏப்ரல் 26*]

*என்று சொல்லியிருக்கின்றார்கள். எனவே, தொழிற்பூங்கா, அது உணவுப் பூங்காவாக உருவாகக்கூடிய நிலைமை வந்தால், ஏற்கெனவே மாண்புமிகு வேளாண் துறை அமைச்சர் அவர்கள், வேளாண் துறை பட்ஜெட்டிலே சொல்லியிருப்பதைப்போல, அதையும் அந்த மாவட்டத்திலே இயல்பிலே வரக்கூடிய சாத்தியக்கூறுகள் இருக்கக்கூடிய காரணத்தினால், அது குறித்து நிச்சயமாக அரசு கனிவோடு பரிசீலிக்கும்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.பி. நாகைமாலி அவர்கள்.*

**திரு. வி.பி. நாகைமாலி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டெல்டா மாவட்டத்தில் கிடைக்கக்கூடிய வைக்கோலைப் பயன்படுத்தி திருவாரூரிலே ஒரு தொழிற்சாலை அமைக்கப்படுமா என்கின்ற கேள்வியை மாண்புமிகு திருவாரூர் சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் இங்கே எழுப்பினார்கள். நானும் இந்தக் கேள்வியை எழுப்பியிருக்கிறேன். வெட்டுத் தீர்மானத்திலும் கொடுத்திருக்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அதைப் பதிவு செய்து கொள்ள வேண்டும், அவ்வளவுதானே!*

**திரு. வி.பி. நாகைமாலி:** *ஆகவே, என்னுடைய கேள்வியைப் பதிவு செய்து கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *நன்றி. மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன் அவர்கள்.*

**திரு. தி. வேல்முருகன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலூர், கன்னியாகுமரி, அரியலூர், பெரம்பலூர், புதுக்கோட்டை, விழுப்புரம் போன்ற மாவட்டங்களில் முந்திரி அதிகமாக விளைகிறது. முந்திரியினுடைய பருப்பை நாம் பயன்படுத்திக் கொள்கிறோம். அந்தப் பழங்கள் இலட்சக்கணக்கான டன் வீணாகத்தான் போகின்றன. முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் கடந்த கால ஆட்சியில் முந்திரிப் பழங்களைக் கொண்டு ஒரு தொழிற்சாலையை உருவாக்க வேண்டுமென்று கேட்டேன். அதற்காக ஒரு வல்லுநர் குழு கோவாவிற்கு அனுப்பப்பட்டது. அங்கு ஒயின் மற்றும் சாராயம் தயாரிக்கப்படுகிறது. நம்முடைய பகுதியில் ஒயின் மற்றும் சாராயம் தயாரிக்காவிட்டாலும், தென்னாப்பிரிக்கா போன்ற நாடுகளில் ஊட்டச் சத்து பானமாகத்*

தயாரிக்கப்பட்டு மிகப் பெரிய அளவிலே உலகம் முழுவதும் ஏற்றுமதியாகிறது. அதுபோன்று ஒரு தொழிற்சாலையைக் கொண்டு வருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு, அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது மூலக் கேள்விக்குச் சம்பந்தம் இல்லையென்றாலும், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் இதற்கு பதில் சொல்லிவிடுங்கள்.

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் உற்சாக பானம் இல்லாவிட்டாலும் ஊட்டச் சத்து பானமாவது கிடைக்க வேண்டுமென்று இங்கு கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். (சிரிப்பு) அது வணிகரீதியிலே இருக்கக்கூடிய சூழ்நிலைகளைப் பொறுத்தது. ஏற்கெனவே இங்கே குறிப்பிட்டிருப்பதைப்போல, ஒரு தொழிற்சாலை ஆரம்பிக்க வேண்டுமென்று சொன்னால், வணிகரீதியாக சாத்தியக்கூறுகள் அந்தப் பகுதியிலே நிச்சயமாக இருக்க வேண்டும். ஏற்கெனவே முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுடைய ஆட்சியிலே நீங்கள் கேட்டு, மறைந்த முன்னாள் அமைச்சர் திரு. வீரபாண்டி ஆறுமுகம் அவர்கள் அறிவித்திருப்பதாக நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள். எனவே, அது குறித்த கோப்புகளையும் அதற்கான சாத்தியக்கூறுகளையும் techno-economic feasibility study மூலம் முறைப்படி ஆராய்ந்து, அரசு அதுகுறித்து ஒரு முடிவினை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. A.K. செல்வராஜ் அவர்கள்.

**திரு. A.K. செல்வராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்களுக்கு என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேட்டுப்பாளையம் தொகுதியில். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தஞ்சாவூர் மாவட்டத்தில் வைக்கோல் இருக்கிறது. மேட்டுப்பாளையத்திற்கும் இதற்கும் என்ன சம்பந்தம் இருக்கிறது? என்ன கேள்வி கேட்கப் போகிறீர்கள்?

*2022 ஏப்ரல் 26*]

**திரு. A.K. செல்வராஜ்:** *கேட்க இருப்பது நல்ல கேள்விதான்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *கேளுங்கள்.*

**திரு. A.K. செல்வராஜ்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேட்டுப்பாளையம் தொகுதியில் சிறுமுகை, காரமடை ஆகிய பகுதிகளிலே வாழை அதிகமான அளவிலே விளைகிறது. வாழைப் பட்டையிலிருந்து நார் தயாரிக்கலாம். வாழைத்தண்டிலிருந்து பிஸ்கட் தயாரிக்கலாம். வாழைக் கிழங்கிலிருந்து கிடைக்கும் சித்த மருத்துவ நீரைப் பயன்படுத்தலாம்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *நல்ல, பெரிய முதலாளி மாதிரி அங்கே இருக்கிறீர்கள். நீங்கள் ஆரம்பித்தால், அனுமதி கொடுத்துவிட்டுப் போகிறார்கள்.*

*முற்பகல் 10–15*

**திரு. A.K. செல்வராஜ்:** *இது, தொகுதி மக்களுடைய நீண்ட நாள் கோரிக்கை. வாழையை வைத்து ஒரு தொழிற்சாலை அமைக்க வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறார்கள்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *சரி.*

**திரு. A.K. செல்வராஜ்:** *ஏற்கெனவே, கடந்த ஆட்சியில் இதுசம்பந்தமாக மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் அவர்கள்* I.I.T. *மூலமாக ஆய்வு செய்து அறிக்கையைப் பெற்றிருக்கிறார்கள். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மேட்டுப்பாளையம் தொகுதியில் வாழை சம்பந்தமாக ஒரு தொழிற்சாலையை அமைக்க முன்வருவார்களா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாழையைக் குறித்து இருக்கக்கூடிய தொழிற்சாலைகளுக்கு உலகளவிலே பெரிய சந்தை ஒன்றை உருவாக்க வேண்டியது அவசியம். உதாரணத்திற்கு, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் அறிவார்கள்;–நெல்லை மாவட்டத்தை ஒட்டியிருக்கக்கூடிய* **ஸ்ரீ**வைகுண்டம் *பகுதியில் நிறைய வாழை மரங்கள் இருக்கின்றன. தமிழ்நாட்டிற்குத் தேவையான வாழைப்*

பொருட்களில் பெரும்பகுதி அங்கிருந்துதான் வருகிறது. எனவே, அதை மையமாக வைத்து, வாழை மரங்கள், வாழை நார்கள் உள்ளிட்ட தொழில்களைத் துவங்குவதற்கு அரசுக்கு ஒரு திட்டம் இருக்கிறது. பொதுவாக, தொழில் துறையைப் பொறுத்தமட்டில், அரசு தொழிலைத் துவங்குவதைவிட, தொழில்முனைவோர்கள் முதலீட்டோடு அதைத் தொடங்க முன்வந்தால், அவர்களுக்கான ஒரு facilitation செய்யக்கூடிய துறையாக இந்தத் துறை இருக்கிறது. ஆக, தொழில்முனைவோர்கள் வந்தாலும் நாம் அதைச் செய்யலாம் அல்லது I.I.T. போன்ற நிறுவனங்களில் யாராவது ஒரு Incubation Centre வைத்துக்கொண்டு, Startup போன்ற நிறுவனங்கள் இதைத் துவக்குவதற்கு முன்வந்தால், அரசின் சார்பாக எல்லாவிதமான வசதிகளையும் செய்து, அந்தத் தொழில்களைக் கொண்டுவருவதற்கான ஊக்குவிப்பினை நிச்சயமாக அரசின் தொழில் துறை செய்யும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 175, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.சி. சண்முகையா, மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

**175—**

**படித்துறைகள் அமைத்தல்**

***2929—திரு. எம்.சி. சண்முகையா:**

*மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) ஒட்டப்பிடாரம் தொகுதி, கருங்குளம் ஒன்றியம், மணக்கரை ஊராட்சி, வடக்கு அனந்தநம்பிக்குறிச்சி கிராமம், கீழக்கால் தாமிரபரணி ஆற்றில் படித்துறைகள் கட்ட அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*(அ) மற்றும் (ஆ) தூத்துக்குடி மாவட்டம், மணக்கரை ஊராட்சி, மருதூர் கீழக்கால் வாய்க்காலில் அனந்தநம்பிக்குறிச்சி வடக்கூர் ஆதி திராவிட பகுதி மக்களுக்கு படித்துறை கட்டுதல்*